**செப்டம்பர் மாதம் 16 – ஆம் தேதி செவ்வாய்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 58/2016**

O.S. No.: 58/2016 – சரோஜா DW3 16.09.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இவ்வழக்கில் நான் 2ம் பிரதிவாதி ஆவேன். 4ம் பிரதிவாதி சிந்துஜா எனது மகள் ஆவாள். 5ம் பிரதிவாதி ஹரின் எனது பேரன் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த தம்பி ராம்நிவாஸ் என்பவருக்கு எனது மகளை திருமணம் முடித்துக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் ஓய்வுப்பெற்ற அரசு ஊழியர் என்றால் சரிதான். நான் புதுச்சேரியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவர் புதுச்சேரியில் வேலை பார்த்ததால் அங்கேயே தற்போது வரை குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்தில் கண்டுள்ள வயல்பட்டியில் உள்ள பூர்வீக வீட்டில் பாதி வீடு எங்களுக்கு பாத்தியப்பட்டது, மீதமுள்ளபாதி எனது சிறிய தாத்தாவின் மகனான நாட்டுத்துரையிடமிருந்து கிரையம் பெற்றது ஆகும். எனது அப்பா சீனிவாசன் தான் நாட்டுத்துரையிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 2ம் லக்க சொத்தான முத்துத்தேவன்பட்டியிலுள்ள சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். 3ம் லக்க சொத்தான கேரோளவிலுள்ள எஸ்டேட் பூர்வீக சொத்து என்றால் சரிதான். 4ம் லக்க சொத்தான தேனி, சுப்பன் தெருவிலுள்ள இடம் எனது தந்தை சீனிவாசனும், வாதியின் கணவரும் கூட்டாக கிரையம் பெற்றது என்றால் சரிதான். 5ம் லக்க சொத்து எனது தந்தைக்கு வாதி தானசெட்டில்மென்ட் மூலம் பாத்தியப்படுத்திக்கொடுத்து அந்த சொத்தில் எனது தந்தையும், தம்பியும் சேர்ந்து வீடு கட்டினார்கள், அந்த சொத்து ஆண்வாரிசுகளுக்கு போய் சேர வேண்டியது என பத்திரம் உள்ளது. மேற்படி சொத்துக்களை தவிர உப்புக்கோட்டையில் உள்ள வயலும், தேனி – பெரியகுளம் ரோட்டில் உள்ள வீடும் இருந்தது என்றால் சரிதான், அந்த சொத்துக்களை விற்றுத்தான் தேனி, சுப்பன் தெருவில் உள்ள பாதி இடத்தை

எனது தந்தை கிரையம் வாங்கினார். தேனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.164/2014 என 4ம் பிரதிவாதி பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு தேனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு, அதன்மீது தேனி, சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான், மேற்படி மேல்முறையீட்டிற்கு மேல் இரண்டாம் மேல்முறையீடு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்து, நிலுவையில் இருந்து வருகிறது. தேனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.27/2015 என தேனி, சுப்பன் தெருவில் உள்ள இடத்தை பொறுத்து முருகேசன் என்பவர் வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த இரண்டாம் மேல்முறையீட்டின் நகலை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கை தவிர தேனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.100/2018 என கிரைய ஒப்பந்தம் சம்பந்தமாக வாதி கலா மீது 4ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடியான விபரம் எனக்கு தெரியும். மேற்படி தேனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.100/2018 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் மேல் மேல்முறையீடு தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. 4ம் பிரதிவாதி சிந்துஜா என்பவர் தேனி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கலா மற்றும் அவரின் குடும்பத்தார் மீது Crl.M.P.5714/2024 என தனிநபர் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும். அந்த தனிநபர் வழக்கு தேனி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் 4ம் பிரதிவாதி சிந்துஜா என்பவர் நேரடியாக புகார் கொடுத்து அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேனி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள தனிநபர் வழக்கிற்கும், பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் 4ம் பிரதிவாதி சிந்துஜா என்பவர் நேரடியாக கொடுத்த புகாருக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. பழனிசெட்டிபட்டி காவல்

நிலையத்தில் 4ம் பிரதிவாதி சிந்துஜா என்பவர் நேரடியாக கொடுத்த புகார் மனுவில் உண்மையில்லை என்று அந்த வழக்கு முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கு நிலுவையில் உள்ளது, அவ்வாறு நிலுவையில் இருந்துவருவதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் 4ம் பிரதிவாதி சிந்துஜா என்பவர் நேரடியாக கொடுத்த புகார் மனு முடிக்கப்பட்டுவிட்டது என்றும், அந்த மனு மீதான விசாரணை நடைபெற்றிருந்தால், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றும், அந்த குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யாததால் அந்த புகார் மனு முடிக்கப்பட்டுவிட்டது என்றும், அதனால் தான் இந்த வழக்கில் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்திருமணம் ஆனது முதல் இன்றுவரை புதுச்சேரியில் தான் குடும்பத்துடன் வசித்து வருகிறேன் என்றும், அதனால் வழக்கு சம்பந்தப்பட்ட விபரங்களும், சொத்து சம்பந்தப்பட்ட விபரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.164/2014, அ.வ.27/2015, அ.வ.100/2018 ஆகிய வழக்குகளின் தன்மைக்கும், இந்த வழக்கின் தன்மைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் எனது மகளுக்கு சாதகமாக வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வழக்குரை சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக மற்றும் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும், அதனால் வாதிக்கு பிராதில் கோரிய பாகம் கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 16.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.16 18:22:00 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
16.09.2025.